அவர்களுக்கு எங்களுடைய மாவட்டக் கழகத்தின் சார்பாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியைக் கொடுத்து கௌரவித்திருக்கின்றேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் அறிமுகம் செய்து வைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

5. அறிக்கை அளித்தல்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏழு பேர் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். குழுக்களின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று மகத்துவமான வாழ்க்கை வாழ்ந்து தான் வாழ்ந்த நாட்களில் தன்னால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லையென்று, அனைத்தையும் அளப்பரிய சாதனையாகச் செய்து முடித்து, நம் அனைவரின் இதயங்களிலும் நீக்கமற என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற, மனிதப் புனிதவதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், திரு. எஸ். அம்பேத்குமார், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. க. கார்த்திகேயன், திரு. பி. முருகன் மற்றும் திரு. கு.க. செல்வம் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.